**குறுவிட்ட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 07 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குறுவிட்ட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 1,652,055 தொகை வருமானக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய மற்றும் ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 99,203,300 கூட்டுத்தொகையானது கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் அகற்றுவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 11,734 கூட்டுத்தொகையான தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் நூலகப் புத்தகங்கள் என்பவற்றை அகற்றுவதற்கு முன் கணக்கு மீதியில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 359,000 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 85,500 தொகையான ஆயுர்வேத நிதி உதவிகள் ரூபா 185,500 ஆகக் கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆயுர்வேத மருந்து இருப்புக்கள் என்பன ரூபா 100,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நீதவான் நீதிமன்றத்தில் பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகத்தர்களுக்கு செலுத்துவதற்காகக் கிடைத்த ரூபா 16,250 தொகை நீதிமன்ற தண்டப்பண பெறுவனவுகளாக பதியப்பட்டமையின் காரணமாக, அறவிடவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2018 ஆம் ஆண்டிற்காக முற்பணமாகக் கிடைத்த ஆதனவரிக் கட்டணம் ரூபா 298,332 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணதாக ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்குரிய 2018 மார்ச் மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 290,480 தொகை கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதி என்பன சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 22,059,770 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 06 வருமான விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் அதற்குரிய குறிப்புக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 23,488,355 வேறுபாடு காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டு ரீதியாக காண்பிக்கப்பட்ட முன்னைய ஆண்டுக்குரிய பெறுமதிகளையும் முன்னைய அண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதியையும் ஒப்பீடு செய்த போது 08 கணக்கு விடயங்களுக்குரியதாக ரூபா 32,570,886 கூட்டுமொத்தமான வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 44,875 ஆக இருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடன் தகவல்களின் பிரகாரம் அவ்வாறான மீதியொன்று காணப்படவில்லை.

(உ) ஆசிய அபிவிருத்தி கடன் நிதியத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 9,435,811 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடன் தகவல்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 9,046,211 ஆனமையால் ரூபா 389,600 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 7,886,701 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 158,436,971 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி<br>விதி 204 | 11,350 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்ட 11 பொருள் அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக 2017 நவம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 3,090,069 | 2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 11,530,994 | 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டின் கோவையின் 8.12.1(ஆ) வழிகாட்டி | 264,000 | கொள்வனவு செய்யப்பட்ட கணனி குறித்த மாதிரிகளுக்கு இணங்க இருந்ததாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு இன்றி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,298,073 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,301,090 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,313,624 | 3,551,623 | 4,222,649 | 3,854,219 | 2,419,591 | 1,830,205 | 1,599,919 | 4,556,262 |
| வாடகை | 7,345,665 | 6,608,828 | 6,626,857 | 2,598,147 | 6,413,436 | 3,182,256 | 6,416,818 | 1,908,571 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,773,000 | 2,643,275 | 2,636,040 | - | 1,451,100 | 2,179,154 | 2,179,154 | - |
| ஏனைய வருமானம் | 41,701,040 | 38,762,500 | 21,345,725 | 40,027,736 | 18,230,482 | 38,068,035 | 29,512,346 | 23,356,188 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது ஆதன வரி, அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 82 சதவீதம், 49 சதவீதம், 02 சதவீதம், 68 சதவீதம் மற்றும் 49 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**(அ) ஆதனவரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 3,499,290 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களை விட மேறப்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற 377 அலகுகளில் இருந்து அறவிட வேண்டியவை ரூபா 2,293,068 கூட்டுமொத்தமாக காணப்பட்டது. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான சபையின் செயற்படுநிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை ஏக்கர் வரி ரூபா 4,099,057 தொகையை மீளாய்வாண்டின் வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

**2.2.4 வாடகை**

2009 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த புதிய சந்தை தொகுதியின் 05 கடைகளுக்காக ஆரம்பம் முதல் வாடகை அறவிடப்பட்டமையின் காரணமாக 2014 யூலை 30 ஆந் திகதி அந்த கடைகள் முத்திரை வைக்கப்பட்டு சபைக்கு கையேற்கப்பட்டிருந்தது. வாடகையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடாமையால் சபைக்கு

கிடைக்க வேண்டிய ரூபா 4,436,000 கூட்டுத்தொகையான நிலுவைக் கடை வாடகை மற்றும் தண்டப்பணம் என்பவற்றை அறவிடுதல் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் இயலுமை காணப்படவில்லை எனக் காண்பித்து நிலுவைக் கடை வாடகையை பதிவளிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் என்பன அறவிட வேண்டிய வியாபார நிலையங்களை கண்டறியும் வகையில் வருடாந்த மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்கம் என்ற அதிகாரச்சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன்கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க வேண்டிய 14 வியாபார நிலையங்களில் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாமையின் காரணமாக சபைக்கு ரூபா 61,600 இழக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கைத்தொழில்களை நடாத்திச் செல்லும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கம் தொடர்பாக காலரீதியில் மதிப்பீடு ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 02 நிலையான அறிவித்தல் பதாதைகளில் கிடைக்க வேண்டிய ரூபா 90,000 கூட்டுத்தொகையான வருமானமொன்றை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

### 2.2.7 முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதிக்குரிய அவிசாவளை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து அறவிடவேண்டிய ரூபா 822,151 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டண வருமானம் 2018 மார்ச் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்குரிய இரத்தினபுரி மற்றும் ஹொரணை காணிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து அறவிட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை**

சபையின் 02 உபஅலுவலகங்களுக்குரிய சேகரித்தல் கணக்குகளாக பேணப்படுகின்ற 02 நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் நீண்டகாலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2017 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் அந்த 02 கணக்குகளினதும் கூட்டுத்தொகை ரூபா 3,884,521 ஆக இருந்தது.

**3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் மொத்தமாக 2.6 ஹேக்டேயர் அளவான 82 காணிக் கூறுகள் மீளாய்வாண்டின் போது கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்தல் தொடர்பாக 2017 திசெம்பர் 14 ஆந் திகதி வரையும் சபையினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உரிய ஆதனங்கள் வியாபாரக் கம்பனியின் இணையத்தளத்தில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதி வரையில் 33 காணிக்கூறுகள் விற்பனை செய்து முடிவடைந்திருந்த போதிலும், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) பிரிவின் பிரகாரம் அந்தக் காணி விற்பனைகளிலிருந்து கிடைக்கின்ற 01 சதவீத வருமானம் சபைக்குக் கிடைப்பது நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

(ஆ) 1996 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய 935/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டம் மற்றும் கட்டிட கட்டளைகளின் 22 ஆவது கட்டளையின் பிரகாரம் கூறுகளாக்கப்பட்ட காணியில் 102 பேர்ச் அளவு பொதுச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கி சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பறகடுவ, இசுறு பிரதேசம், பெரடைஸ்வத்த காணி விற்பனை செய்யும் போது பொதுச் சயெற்பாடுகளுக்காக சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 184.7 பேர்ச் காணிக் கூறில் அயலிலுள்ள வீட்டுரிமையாளரினால் அனுமதியற்ற வகையில் கிணறு நிர்மாணிக்கப்பட்டு அது தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. உரிய காணிப்பகுதி பாதுகாப்பு மற்றும் எதிர்பார்த்த நோக்கத்தில் ஈடுபடுத்துவது தொடர்பாகவும் சபை போதியளவான கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்ற 03 காணி விற்பனைகளுக்குரிய நிர்ணயிக்கப்பட்ட அளவை விட குறைவாக வரி அறவிடப்பட்டமையின் காரணமாக சபை நிதியததிற்கு ரூபா 764,444 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. உரிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு 2018 மார்ச் வரையிலும் சபை தவறியிருந்ததுடன் அதிகாரச்சட்டத்தின் 154(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை**

சபைக்குச் சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முறையாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட நடுகாறதெனிய உப வீதிகள், நிர்ணயிக்கப்பட்ட நியமத்தில் நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக மழை நீரினால் மூழ்கியிருந்ததுடன் அதற்கு தீர்வாக சபையினால் மீண்டும் ஒரு தடவை கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், வீதியின் வலது பக்கத்தில் நீர் வடிந்து செல்லும் முறையில் வடிகாண் நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக, ஒட்டுமொத்த வீதியும் தொடர்ந்தும் மழை நீரினால் மூழ்கியிருந்தது. அதன் பிரகாரம் கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்யும் நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ரூபா 247,815 கூட்டுமொத்தமான செலவினமும் பயனற்றதாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 1,981,740 தொகை செலவில் பறகடுவ அலுவலக வயல்வெளி வீதிக்கு கொங்கிறீட் இடப்பட்டிருந்த போதிலும், அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் வீதியின் இருபக்கமும் பொருத்தப்பட்டிருந்த மின்கம்பங்கள் அகற்றப்பட்டு வீதிக்கு இடையூறு இல்லாத வகையில் மீண்டும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வீதி விஸ்தரிக்கும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நீர் வடிந்து செல்லும் முறையில் கொங்கிறீட் இடப்படாமையின் காரணமாக மழைநீர் வீதியில் ஒன்றுசேர்வதனால் போக்குவரத்துக்கு இடையூறாகவும் இருந்தது.

(இ) சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொங்கிறீட் இடப்பட்டு வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) நிர்மாணிக்கப்படுகின்ற வீதியின் வீதி மேற்பரப்பு (Edges) மண் / கிரவல் இட்டு செப்பனிடப்பட வேண்டியிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எந்தவொரு வீதியினதும் மேற்பரப்பில் மண் / கிரவல் இடப்பட்டு செப்பனிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொங்கிறீட் இடப்பட்ட வீதியின் அடிப்பகுதி பிரதேசத்தின் தன்மை மற்றும் மண்ணின் தன்மையின் பிரகாரம் குறித்த நியமத்தில் கொங்கிறீட் இடப்படாமையின் காரணமாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்யும் போது கொங்கிறீட் படைக்கு அந்த அமுக்கத்தை தாங்கிக் கொள்ள முடியாமையினால் வீதியில் இடப்பட்ட கொங்கிறீட் படை வெடித்திருந்தது.

(iii) வீதியில் இடப்பட்டுள்ள கொங்கிறீட் குறித்த அமுக்க சக்தியைக் கொண்டிருந்ததா என பரீட்சிக்கும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,347,300 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 420,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 99 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) நிதிக்கூற்றுக்களின் பெறுமதிக்கும் குறிப்புக்களின் பெறுமதிக்கும் இடையே இணக்கமின்மை காணப்பட்டமை. |
| | (ii) பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| | (iii) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளுடன் இணங்காமை காணப்பட்டமை. |
| | (iv) கணக்குகளிலிருந்து கைவிடல்கள் காணப்பட்டமை. |
| | (v) உறுதிப்படுத்தும் சான்றுகள் காணப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | (i) நிர்ணயிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்படாமை. |
| | | (ii) வருமானம் அறவிடப்படாமை. |
| (ஈ) | செயற்திட்டம் / ஒப்பந்தம் | போதியளவான மேற்பார்வை காணப்படாமை |